செ.வெ.எண்.02 நாள்:02.11.2020

**நீலகிரி மாவட்டத்தில் படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்காக உயர்த்தப்பட்ட மானிய தொகையுடன் தொழில் கடன் பெற்று தொழில் துவங்க விண்ணப்பிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பை உருவாக்கும்பொருட்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (யு.ஓய்.ஈ.ஜி.பி) மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

தற்போது உற்பத்தி பிரிவில் திட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாகவும் மானிய உச்ச வரம்பு தொகையினை ரூ.1.25 இலட்சத்திலிருந்து ரூ.2.5 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

சேவை மற்றும் வியாபாரத் தொழில்கள் துவங்க அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தொழிற்கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டு தமிழக அரசு சார்பில் 25 விழுக்காடு மானியம் அதிகபட்சம் ரூ.1.25 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

மேலும், இந்நிதியாண்டில் தொழில் முனைவோர் விரைவில் தொழில் துவங்கும் பொருட்டு தேர்வுக்குழு மூலமாக நடக்கும் நேர்முகத்தேர்விலிருந்தும் திட்டங்களுக்கான தொழில் முனைவோர் வளர்ச்சிக்கான பயிற்சியிலிருந்து மாநில அரசு விலக்கு அளித்து அரசாணை பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2020-21-ம் நிதியாண்டிற்கு 65 தொழில் திட்டங்களுக்கு ரூ.45 இலட்சம் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 21 பயனாளிகளுக்கு ரூ.16.25 இலட்சம் மானியத்துடன் கூடிய ரூ.67 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தொழில் துவங்க வழங்கப்பட்டுள்ளது.

தகுதிகள்: எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 18 வயது பூர்த்தியடைந்து இருக்க வேண்டும். பொதுப்பிரிவினருக்கு அதிகபட்ச வயதாக 35 மற்றும் சிறப்பு பிரிவினருக்கு அதிகபட்ச வயதாக 45 இருக்க வேண்டும். சிறப்பு பிரிவினரில் பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கையர் ஆகியோர் தகுதியானவர்கள். நீலகிரி மாவட்டத்தில் 3 வருடங்களுக்கு குறையாமல் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும். குடும்ப வருமான உச்ச வரம்பு ஆண்டிற்கு ரூ.5.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தொழில் கடன் பெற www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்கள் பெறவும், கூடுதல் வழிகாட்டுதலுக்கும் 9095887443, 8903048485, 8675720474 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

ஆகவே, தகுதியும் ஆர்வமும் உள்ள தொழில் முனைவோர்கள் இத்திட்டத்தில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஜெ. இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.